2013 ஏப்ரல் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான ஆணையின்படி இந்தக் குளத்தை தூர் வாரி மற்றும் அனைத்து ஏற்பாடுகளும் செய்து, ஆழப்படுத்தி தண்ணீரை நிரப்பும் வண்ணம் ஆழ்குழாய்க்கிணறு அமைத்து, அனைத்து மின் விளக்குகள் எல்லாம் செப்பனிடப்படும். மாண்புமிகு அம்மா அவர்கள் இதற்காக 61 இலட்சம் ரூபாய் நிதியினை ஒதுக்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, விரைவிலே, இந்தப் பணிகளெல்லாம் முடிக்கப்பட்டு, இந்த ஆண்டு புரட்டாசி மாதம் பிரம்மோற்சவத்தின்போது தெப்பத் திருவிழா மிகச் சிறப்பாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே நடைபெறும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.*

திரு. ஏ.கே. போஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொன்ன பிரகாரம், அங்கே தண்ணீர் தேக்கி திருவிழாவைச் சிறப்பாகச் செய்வதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதற்கும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 194, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

194—

நீர்த்தேக்கத் தொட்டி

***20494—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் 25,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

[2013 ஏப்ரல் 9

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சா்: மாண்புமிகு பேரவைத் தலைவா் அவா்களே,

சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை கிளைக் கழகச் செயலாளராகவும், ஒன்றியக் கழகச் செயலாளராகவும், மாவட்டக் கழகத் துணைத் தலைவராகவும், மாவட்ட விவசாயப் பிரிவு செயலாளராகவும், மாவட்டக் கழகத்தினுடைய செயலாளராகவும், ஒன்றியக் குழு தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் வாழ்வளித்து, மக்கள் நல்வாழ்வுத் துறையை வழங்கி, விசுவாசமிருந்தால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொண்டனும் (மேசையைத் தட்டும் ஒலி), அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொண்டனும் அமைச்சராகலாம் என்ற நிலையை உருவாக்கிய அன்னையே, (மேசையைத் தட்டும் ஒலி) துறையின் சாா்ந்த முதல் கேள்விக்கு பதில் அளிக்க வாய்ப்பை தந்த மாண்புமிகு அம்மா அவா்களின் பாதம் பணிந்து நன்றியுடன் வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவா் அவா்களே, தற்போது வேதாரண்யம் கூட்டுக் குடிநீா்த் திட்டத்திலிருந்து திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்குக் குடிநீருக்காக தனி இணைப்புப் பெறப்பட்டு, குடிநீா் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், மருத்துவமனைக்குத் தேவையான 5,000 லிட்டா் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீா்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, ஆழ்துளைக் கிணறுமூலம் தண்ணீா் பெறப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது. திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் 124 படுக்கைகள் வசதி கொண்ட வட்ட மருத்துவமனை இயங்கி வருகிறது.

முற்பகல் 11-25

தினமும் சராசரி 97 உள் நோயாளிகளும் 1,070 வெளி நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனா். இந்த மருத்துவமனையில் 24 மணி நேர அறுவை சிகிச்சை வசதியும் மற்றும் தீவிர பச்சிளங்குழந்தைகள் பராமரிப்பு மையமும் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும், இந்த மருத்துவமனையில் மாண்புமிகு அம்மா அவா்களின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் வாா்டு எண் 500-ல் அமைக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு

2013 ஏப்ரல் 9]

அம்மா அவர்களின் மக்கள் நல அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை கவனத்தில் எடுத்துக் கொண்டு வளர்ந்து வரும் மருத்துவமனையின் தேவைக்கு ஏற்ப கூடுதல் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி மருத்துவமனை, தாலுகா மருத்துவமனையாக இயங்கி வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல 124 உள் நோயாளிகளும், சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெளி நோயாளிகளும் தினமும் வந்து சிகிச்சை பெற்றுச் செல்கின்றார்கள். 20-க்கும் மேற்பட்ட மருத்துவர்களும், செவிலியர்களும் பணியாற்றி வருகிறார்கள். ஆகவே, இந்த மருத்துவமனையில் திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, வேதாரண்யம், தலைஞாயிறு போன்ற பகுதிகளிலிருந்து வந்து சிகிச்சை பெறுகிறார்கள். அங்கே 5 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிதான் இருக்கிறது. உள் நோயாளிகள் சிகிச்சை பெற பயன்படுத்தக்கூடிய கழிப்பறையும், அதேபோல மருத்துவமனைக்குத் தேவையான அளவுக்குத் தண்ணீர் இல்லாத காரணத்தினால், அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை தேவைக்கு ஏற்ப மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, சுமார் 25 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் தலைநகர் டெல்லியானாலும்,

பொருளாதாரத்திலே மும்பை சிறந்து விளங்கினாலும், மாண்புமிகு அம்மாவின் தலைமையிலான தமிழக அரசு சுகாதாரத்திலே இன்றைக்கு எல்லாவிதத்திலும் முன்னணியிலே திகழ்ந்து கொண்டு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய அந்தக் கேள்வியை தீர விசாரித்து, ஆராய்ந்து அந்த மருத்துவமனைக்கு மேலும் கூடுதலான தண்ணீர் தேவையிருப்பின், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அது சீர் செய்து தரப்படும் என்பதை தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி மருத்துவமனையில் ஸ்கேன் வசதி இல்லை. ஸ்கேன் எடுக்க வேண்டும் என்று சொன்னால் திருவாரூர் தலைமை மருத்துவமனைக்குத்தான் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே நோயாளிகளின் நலன் கருதி ஸ்கேன் வசதி செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கேட்கக் கூடிய மருத்துவமனைக்கு அந்த வசதிகள் எல்லாம் தேவைப்படுமானால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அங்கே ஸ்கேன் வசதி செய்து தருவதற்கு அம்மாவின் அரசு முன்வரும் என்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கயத்தாறிலே சுதந்திரப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு மணி மண்டபம் கட்டப்படும் என்று*

2013 ஏப்ரல் 9]

அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல நேற்றையதினம் விதி 110-ன்கீழ் உலக சதுரங்கப் போட்டி சென்னையிலே நவம்பர் 6 ஆம் தேதி முதல் நடத்தப்படும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பான ஒரு செய்தியை அறிவித்ததை வரவேற்கின்ற அதேநேரத்தில், எனக்கு ஒரு பாடலின் வரிகள் மட்டும்தான் ஞாபகத்திற்கு வருகின்றன. அது புரட்சித் தலைவர் அவர்கள் பாடிய பாடல் வரிகள். பட்டுக்கோட்டையார் எழுதிய பாடல் வரிகள். 'ஆளும் வளரணும்; அறிவும் வளரணும்; அதுதான்டா வளர்ச்சி, உன்னை ஆசையோடு ஈன்றவளுக்கு அதுவே நீ தரும் மகிழ்ச்சி' என்ற பாடல் வரிகள்தான் எனக்கு ஞாபகம் வருகின்றன. காரணம், அறிவும், ஆற்றலும், திறமையும் வளர வேண்டும் என்ற தொலைநோக்குச் சிந்தனையோடு செயல்படுகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் வாழ்த்தவும், பாராட்டவும் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தென்காசி தொகுதி, தென்காசி நகர உட்பகுதியில் மாவட்டத் தலைமை மருத்துவமனை அமைந்துள்ளது. இந்த மருத்துவமனை வளாகம் நகராட்சிப் பகுதியைவிட 10 அடி உயரமான மேட்டுப் பகுதியில் அமைந்துள்ளது. இந்த மருத்துவமனையில் நிரந்தரப் பிரிவில் 200 படுக்கைகளும், அவசர சிகிச்சைப் பிரிவில் 50 படுக்கைகளும் உள்ளன. இம்மருத்துவமனைக்கு நாள்தோறும் புறநோயாளியாக 1,750 பேருக்குக் குறையாமல் வந்து செல்கின்றனர். 250-க்கும் குறையாமல் நோயாளிகள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களை கவனித்துக்கொள்பவர்களும், உறவினர்களும் 500-க்கும் குறையாமல் நோயாளிகளுடன் மருத்துவமனையில் தங்கிக் கொள்கின்றனர். தற்போது மருத்துவமனையின் தேவைக்காக 3 ஆழ்குழாய்க் கிணறுகளும், அதற்கேற்ப 3 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் உள்ளன. இதன்மூலம் கிடைக்கும் நீராதாரம் போதிய நிலையில் இல்லையென்பதை அறிகின்றேன். ஒரு நாளைக்கு இரண்டாயிரம் நபர்களுக்குத் தேவையான நீர் மற்றும் மருத்துவமனை பராமரிப்புக்குத் தேவையான நீர் போதுமானதாகவும் இல்லை. இதனால், மருத்துவமனையின் சுற்றுச்சூழலும் பாதிப்புக்குள்ளாகிறது. எனவே, இம்மருத்துவமனையின் நீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்குக் கூடுதலாக ஒரு திறந்தவெளிக்

[2013 ஏப்ரல் 9

கிணறும், ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தென்காசி அரசு மருத்துவமனையில் வெளி நோயாளிகள் 1,750 பேரும் உள்நோயாளிகள் 250 பேரும் அன்றாடம் பயன் பெறுகிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். தேவைக்கேற்ப நீர் வசதி இல்லையென்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார். துறையின்மூலம் ஆய்வு செய்து, மருத்துவமனையில் மேலும் கூடுதலாக நீர் தேவைப்படுமானால் மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலனை செய்து அதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று தங்கள் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

பசுமை இல்ல அலகுத் தொகையை உயர்த்துதல், ஊரக திரவ, திடக்கழிவு மேலாண்மை மற்றும் சூரிய மின்சக்திப் பயன்பாடு குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*